## மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**எம். சி.ஓ.பி.எண். 517/2017** **நாள். 17.10.2023**

2023ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17 ம் நாள் மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மீனா | தொழில் | |
| த. பெ./க.பெ. | பெருமாள் | சாதி | |
| கிராமம் | சென்னை(திருமுல்லைவாயில்) | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 35 |

**ம..சா.1**

**குறுக்கு விசாரணை**

என் மகன் சந்தோஷ்குமார் என்பவருக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக நஷ்டயீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 31.07.2017 ம் தேதி செஞ்சி , திருவண்ணாமலை ரோட்டில் ஹர்சன் நகரில் விபத்து நடந்தது. TN 20 2367 என்ற காரில் குடும்பத்துடன் திருவண்ணாமலையில் இருந்து வழுதலளம் குளம் கிராமத்திற்கு வந்தோம். மேற்படி கார் என் கணவரின் நண்பரின் கார் ஆகும். மேற்படி காரை என் கணவர் ஓட்டி வந்தார். ரோட்டின் பள்ளத்தில் கார் கவிழுந்து விட்டது. காரில் நான், என் கணவர், என் மகன் மற்றும் என் உறவினர் ஒருவர் வந்தார். முதலில் என் மகனுக்கு செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். என் மகன் தற்போது ஐடிஐ படித்து வருகிறார். என் கணவரின் ஓட்டுநர் உரிமத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை. என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் தான் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ரூ. 10 லட்சம் நஷ்டயீடு கோரியுள்ளேன். நாங்கள் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு 3ம் தரப்பினர் இல்லை என்பதால் எங்களுக்கு 2ம் எதிர்மனுதாரர் நஷ்டுயிடு வழங்கவேண்டியதில்லை என்றாலும், அதனால் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. என் கணவர் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தியதால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டயீடு வழங்கவேண்டியதில்லை என்றாலும், 1ம்எதிர்மனுதாரர் தான் நஷ்டயீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல.